**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 07 ம் நாள் சனிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.266/2019**

**இ.ம.எண்.06/2025**

மைனர்.மணிவேல் இவருக்காக
தாயார் சண்முகவள்ளி **...மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) முருகாயி

2) ஜோதிமணி

3) ஜோதிலெட்சுமி

4) செயலாளர்
அரசு வன இலாக்கா அவர்கள்
செயின் ஜார்ஜ் கோட்டை, சென்னை.

5) தலைமை வன அதிகாரி, பனகல் பேலஸ்,
சைதாப்பேட்டை, சென்னை–15.

6) மாவட்ட வன இலக்கா அதிகாரி, கரூர் மாவட்டம்.

7) தலைமை கணக்காளர், தேனாம்பேட்டை,
சென்னை –18. **..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 23.01.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரருக்கு போதுமான வாய்ப்பளித்தும் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையாகாததால், மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டதாகக் கருதியும், 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.G.செந்தில்குமார்

அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் அவர்கள் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18, விதி 17 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரரால், மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை மீண்டும் அழைக்கக் கோரி உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் ஆஜாராகிய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், மேற்படி மனுவில் 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையை, 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்மனுவுரையாக ஏற்றுக்கொள்ள இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்.

**மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

**3)** மனுதாரர் மேற்படி வழக்கில் இளவர் வாதியாகிய மணிவேல் என்பவரது தாயார் ஆவார். மனுதாரருக்கு வழக்கு பற்றிய அனைத்து விபரங்களும் நன்கு தெரியும். மேற்படி வழக்கில் இம்மனுதாரரை கடந்த 22.08.2024ல் வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரரை குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு முடிந்து விட்டது. அதன்பிறகு, மனுதாரர் தரப்பில் இருந்த சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டியிருந்த நிலையில், மனுதாரருக்கு காலில் அடிபட்டு நடக்க முடியாமல் போய்விட்டதால், மனுதாரர் மருத்துவமனையில் வெளி நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்று

வந்தார். இதனால் மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி வழக்கு விசாரணையை தொடர்ந்து நடத்த இயலாமல் போய் விட்டது. எனவே, கடந்த 30.01.2025 அன்று மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணையை ரத்து செய்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சாட்சியை விசாரிக்க இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4) மேற்படி உத்தரவின் பேரில் 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, கடந்த 12.08.2025ம் தேதி 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, பின்பு மேற்படி வழக்கில் 4 முதல் 5 வரையான அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்வதற்காக கடந்த 20.08.2025ல் வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை மீண்டும் அழைக்கக் கோரி உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். மனுதாரர்/வாதியின் கட்சியை நிரூபிக்க இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பொருட்டு அவசியமானதாக உள்ளது. எனவே, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்களால் அனுசரித்துக்கொள்ளப்பட்டும், பின்பு 4 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:**

5) மனுதாரர் தாக்கல் செய்துள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் நேரிடையாக ஏற்றுக்கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவைகளை முழுமையாக மறுக்கிறார்கள். மனுதாரர் இம்மனுவை, மேற்படி வழக்கை காலதாமதம் செய்வதற்காக தாக்கல் செய்துள்ளார். மனுவில் கூறியுள்ள காரணங்கள்

இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் அல்ல. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரரால் தயாரிக்கப்பட்டவை. மேலும், மேற்படி ஆவணங்கள் மேற்படி வழக்கிற்கு தொடர்புடையதல்ல.

6) மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டுமென்று இம்மனுவில் ஆவண பட்டியலில் கூறப்பட்டுள்ள 1 மற்றும் 2ஆக காட்டக்கூடிய புகைப்படங்களானது இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 65ன் படி உரிய ஆவணங்களைக் கொண்டு தாக்கல் செய்யப்படாததால் அந்த ஆவணங்களை இந்நீதிமன்றம் ஏற்று குறியீடு செய்ய முடியாது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள 3 முதல் 6 வரையான ஆவணங்கள் இந்த 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் தகப்பனரான நாகராஜனின் மருத்துவ ஆவணங்கள் ஆகும். அந்த ஆவணங்களுக்கும் மனுதாரர் கூறியுள்ள தாவா பரிகாரத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மனுதாரரால் நாகராஜனின் மருத்துவ ஆவணங்களை நேரிடையாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது.

7) மனுதாரர் தாக்கல் செய்துள்ள 7 முதல் 10 வரையான ஆவணங்களுக்கும், 2ம் எதிர்மனுதாரரின் தந்தையாகிய லேட்.நாகராஜன் என்பவருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. மனுதாரர் பொய்யான சங்கதிகளைக் கொண்டு அவரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களை இவ்வழக்கிற்கு தொடர்பு இல்லாத ஆவணங்களையும் தாக்கல் செய்ய வேண்டி இவ்வழக்கின் நடவடிக்கையை காலதாமதம் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இம்மனுவானது எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

**தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:**

8) மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

**9)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. ஆவண சாட்சியங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வு:**

**10)** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கானது வாதியாகிய இளவர் மணிவேல் என்பவருக்காக அவரது காப்பாளரும், தாயாருமாகிய சண்முகவள்ளி/இம்மனுதாரரால் தாவா 'A' பட்டியல் சொத்தை பொறுத்து, வாதிக்கு 4ல் 1பங்கு பாகம் பாகப் பிரிவினை செய்து தர வேண்டியும், மேலும் தாவா 'B' பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள உரிமைகளில், 4ல் 1 பங்கு பாகம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், வாதியால் மேற்படி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் இளவர் வாதியின் தாயாரும், காப்பாளரும் ஆகிய இம்மனுதாரானவர், வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, வாதி தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியங்களும் முன்னிறுத்தப்படாத காரணத்தினால் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்தால் வாய்தா போடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பின்பு 4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், இம்மனுவானது மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை மீண்டும் அழைக்கக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**11)** மனுதாரர் தரப்பில், மேற்படி வழக்கில் மனுதாரரை வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பின்பு வா.சா.1ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

செய்து வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்த சமயத்தில், மனுதாரருக்கு காலில் அடிபட்டு நடக்க இயலாமல் போய்விட்டது என்றும், அதனால் மனுதாரர் மருத்துவமனையில் வெளி நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்று வந்ததாகவும், அதனால் மனுதாரர்/வாதி தரப்பில் மேற்படி வழக்கில் சாட்சி விசாரணையை தொடர்ந்து நடத்த இயலாமல் போய்விட்டதாகவும், இம்மனுவை அனுமதிக்காதபட்சத்தில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், இம்மனுவை அனுமதித்தால் மட்டுமே மேற்படி வழக்கின் வாதியின் கட்சியை நிரூபிக்க இயலும் என்றும், நீதியின் நலன் கருதியும் மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை மீண்டும் அழைக்கக் கோரி மனுதாரரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**12)** மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் உள்ள புகைப்படங்கள் இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 65ன் படி உரிய சான்றிதழ் எதுவும் இணைக்கப்படாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மேற்படி ஆவணங்களை குறியீடு செய்ய முடியாது என்றும், மேலும் 3 முதல் 6 வரையான மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் யாவும் 2ம் எதிர்மனுதாரரின் தந்தையாகிய நாகராஜனின் மருத்துவ ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களுக்கும் தாவா பரிகாரங்களுக்கும் எவ்வகையிலும் சம்மந்தமும் இல்லை என்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் இந்நீதிமன்றத்தில் நேரிடையாக தாக்கல் செய்ய இயலாது என்றும், மேலும் 7 முதல் 10 வரையான ஆவணங்களுக்கும் இறந்து போன 2ம் எதிர்மனுதாரரின் தந்தையாகிய லேட்.நாகராஜன் என்பவருக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்றும், மேற்படி வழக்கை காலம் கடத்த வேண்டும் என்பதால் மட்டுமே இம்மனுவானது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறி இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**13)** வழக்கு கோப்புகள் , ஆவணங்கள் மற்றும் இரு தரப்பு வாதங்களையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்ததில் மனுதாரர் கூறியுள்ளதுபோல், மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர் ஆனவர் வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, பின்பு அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, பின்பு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டு 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 4 முதல் 7 வரையான பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக மேற்படி வழக்கிற்கு வாய்தா ஏற்பட்டுள்ளது. மேலும், மேற்படி வழக்கானது, வாதியாகிய இளவர் மணிவேல் என்பவர் மேற்படி இறந்து போன நாகராஜன் என்பவருக்கும், அவரது 2ம் மனைவியான சண்முகவள்ளி என்பவருக்கும் பிறந்த மகன் என்றும் அதன் அடிப்படையில் மேற்படி நாகராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்ட 'அ' பட்டியல் சொத்துக்களில் 4ல் 1 பங்கு பாகம் பாத்தியம் உள்ளதாக கூறி பாகப் பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பது தெரிகிறது. மறுபுறம், பிரதிவாதிகள் தரப்பில் 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் மட்டுமே நாகராஜனின் வாரிசுகள் என்றும், மேற்படி இறந்து போன நாகராஜனுக்கு இரண்டாவதாக வாதியின் தாயாரை திருமணம் செய்தார் என்பதையும், அதனால் மேற்படி நாகராஜன் மற்றும் சண்முகவள்ளி என்பவருக்கு இளவர் வாதி மணிவேல் என்பவர் பிறந்தார் என்பதையும் முற்றிலுமாக மறுத்து கட்சி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**14)** இவ்வாறு இருக்கையில், மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1யை மீண்டும் அழைத்து சில முக்கியமான ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காகவும், அதனை பொறுத்து சாட்சியம் அளிக்கவும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிகிறது. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களாகிய புகைப்படங்கள் இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 65ன் கீழ் முறையான சான்றிதழ் எதுவும் இணைக்கப்படாமல்

தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இதர ஆவணங்களுக்கும் மேற்படி இறந்து போன நாகராஜன் என்பவருக்கும் எவ்வகையிலும் தொடர்பு இல்லை என்றும், மேற்படி ஆவணங்களை மனுதாரர் இந்நீதிமன்றத்தால் நேரிடையாக சமர்பிக்க இயலாது என்றும் கூறி இம்மனுவை நிராகரிக்க எதிர்மனுதாரர்கள் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**15)** இந்நிலையில், மேற்படி வழக்கில் வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு காலில் அடிபட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், அதனால் மேற்படி வழக்கை தொடர்ந்து மனுதாரர்/வாதி தரப்பில் நடத்த இயலாமல் போய்விட்டதாகவும் கூறப்பட்டுள்ள காரணமானது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பொறுத்த ஆட்சேபனைகளை தவிர இம்மனுவை அனுமதிப்பதற்கு குறிப்பான எவ்வித ஆட்சேபனைகளும் செய்யப்படவில்லை என்பது தெரிகிறது.

**16)** இவ்வாறு இருக்கையில், மேற்படி வழக்கில் இரு தரப்பினர்களுக்கும் முறையான தகுந்த வாய்ப்புகள் அளித்து, பின்பு அவரவர்களது கட்சியை தகுந்த வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்வதற்கு போதுமான வாய்ப்புகள் அளித்தால் மட்டுமே இந்நீதிமன்றத்தால் மேற்படி வழக்கில் எழுந்துள்ள எழுவினாக்களை பொறுத்து தீர்மானிக்கமுடியும் என்பதாலும், இரு தரப்பினர்களுக்கும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் தகுந்த வாய்ப்புகள் அளித்த பின்னிட்டே முறையாக நீதி பரிபாலனம் செய்யமுடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ள ஆட்சேபனைகள் யாவும் இம்மனுவில் தீர்மானிக்க முடியாது என்றும், மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்போகும்

ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையை பொறுத்து, வழக்கு விசாரணையில் மட்டுமே அவற்றை தீர்மானிக்கமுடியும் என்பதாலும், இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மேலும், இம்மனுவை அனுமதிக்காபட்சத்தில் எதிர்மனுதாரர்களைவிட மனுதாரருக்கே மேற்படி வழக்கில் அதிக சிரமம் மற்றும் கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அதேவேளையில், இம்மனுவை அனுமதித்த பின்னிட்டு, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களைப் பொறுத்து ஆட்சேபனை செய்யவும், அதனைப் பொறுத்து குறுக்கு விசாரணை செய்யவும் அனைத்து வகையிலும் உரிமையுள்ளதாக நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்க முடிவு செய்துள்ளது.

**<u>முடிவு:</u>**

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.07 14:19:46 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.07 14:19:52 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**